


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (8.11.2025) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் கழக இளைஞர் அணி சார்பில் நடைபெறும் தி.மு.க. 75 அறிவுத் திருவிழாவில், முற்போக்கு புத்தகக் காட்சியினை திறந்து வைத்து, இருவண்ணக் கொடிக்கு வயது 75 கருத்தரங்கத்தினை தொடங்கி வைத்து, காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூலினை வெளியிட்டு தலைமை உரையாற்றினார். இவ்விழாவில், கழக பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, துணை பொதுச் செயலாளர்கள் – அமைச்சர் ஐ.பெரியசாமி, முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ., திருச்சி சிவா எம்.பி., ஆ.ராசா எம்.பி., அந்தியூர் செல்வராஜ் எம்.பி., அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள் வைகோ, செல்வப்பெருந்தகை, மு. வீரபாண்டியன், முத்தரசன், தமிமுன் அன்சாரி, வேல்முருகன், ஈ.ஆர்.ஈஸ்வரன், அப்துல் சமது, நவாஸ் கனி உள்ளிட்ட தலைவர்கள், இந்து குழும இயக்குநர் என். ராம், நக்கீரன் கோபால் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் நடைபெற்ற ”என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். உடன் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.ல்.ஏ, சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் எம்.பி.செ.இராமலிங்கம், தேர்தல் பணிக்குழு செயலாளர் குத்தாலம் கல்யாணம், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி. அய்யாராசு, க.நசீர்முகமது, நடராஜன், ஜெயலெட்சுமி, மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா. தெட்சிணாமூர்த்தி உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் உள்ளிட்ட சார்பு அணியினர், பி.எல்.ஏ, பி.டி.ஏ முகவர்கள் உள்ளிட்டோர் உள்ளனர்.




தி. மு. கழகத்தின் கொள்கைத் திருவிழாவாக, கழக இளைஞரணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வெற்றிநடை போடும் கழக இளைஞரணியின் சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற தி.மு.க. 75_அறிவுத் திருவிழா முற்போக்கு புத்தகக் காட்சியில், அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் பங்கேற்றனர். உடன் தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.முரசொலி, மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. , இயக்குனர் போஸ் வெங்கட் ஆகியோர் உள்ளனர்.

# ‘கரூர் விஷன் 2030 வளரும் கரூர்’ - விழிப்புணர்வு மாரத்தான் போட்டி!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கரூர், நவ. 10-

கரூர் விஷன் 2030 வளரும் கரூர் என்கிற முன்னெடுப்பில் ரூ. 50 ஆயிரம் கோடி உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான விழிப்புணர்வு மாரத்தான் மற்றும் வாக்கத்தான் போட்டிகள் நவ. 9ம்தேதி நடைபெற்றது. கரூர் திருவள்ளுர் மைதானத்தில் இருந்து காலை 5.30 மணிக்கு கரூர் எம்.எல்.ஏ செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார். சிஐஐ. யங் இந்தியன்ஸ், உள்ளிட்ட அனைத்து வர்த்தக அமைப்புகளும் இணைந்து இதனை நடத்தின.

போட்டிகளை தொடங்கி வைத்து கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது:

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 11.19% என உயர்த்தி, இந்தியாவிலேயே முதன் மாநிலமாக்கிய தொழில் முனைவோர்களின் தோழனாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கனவும் லட்சியமுமான, 2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம், ஒன்டிரில்லியன் டாலர் என வளர வேண்டும் எனும் உயரிய இலக்கை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

‘கரூர் விஷன் 2030’ ஐம்பதாயிரம் கோடி ரூபாய் உற்பத்தி இலக்கு என்கிற முன்னெடுப்பில், அனைத்து வர்த்தக நிறுவனங்களும் இணைந்து இப்போட்டிகளை நடத்தியுள்ளன. நம்ம கரூர் வளரும் கரூர் நோக்கி வெற்றி நடை போடுவதற்காக தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களும்,துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், எப்போதும் துணை நிற்கின்றனர்.

தமிழ்நாட்டில் கரூர் மாவட்டத்தை முதன்மை மாவட்டமாக உயர்த்திடுவோம். பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் இப்போட்டிகளில் கடந்த ஆண்டைவிட சிறப்பாக பங்கேற்றுள்ளனர். இன்னும் வரும் ஆண்டுகளில் இதைவிட சிறப்பாக நடைபெறும். நம் முன்னோர் உருவாக்கிய கரூரை இளம் தலைமுறையினர் கையில் எடுத்து வரும் தலைமுறையினருக்கு உணர்த்திடும் வகையில், பங்கேற்க செய்யும் வகையில், சிறப்பான முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளனர். நம்முடைய மண்ணின் வளர்ச்சிக்காக கரூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக எந்நாளும் துணை நிற்பேன்.

இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல், எஸ்.பி. ஜோஷ் தங்கையா, மாநகராட்சி ஆணையர் சுதா மற்றும் வர்த்தக அமைப்புகளின் நிர்வாகிகள் அதிகாரிகள் மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.




நாகை மாவட்டம் நாகூர் தர்கா கந்தூரி திருவிழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வுக் கூடம் நாகூரில் அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, ஆவடி சா.மு . நாசர் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது உடன் மாவட்ட கழக செயலாள என்.கௌதமன், முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், நாகை மாவட்ட ஆட்சி தலைவர் ப. ஆகாஷ், நாடாளுமன்ற உறுப்பினர் வை. செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் முகமதுஷாநவாஸ், அறங்காவலர் காஜிஹுசைன்சாஹீப், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், நாகை நகர் மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, துணைத் தலைவர் எம்.ஆர். செந்தில்குமார் மற்றும் தார்கா டிரஷ்டிகள் உள்ளனர்



நீடாமங்கலம் பேரூராட்சி, சுற்றுப்பகுதி கிராமங்கள் மற்றும் இவ்வழித்தடத்தை பயன்படுத்தும் பல்லாயிரக்கணக்கானோரின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மகத்தான ஆட்சியில், மாநில நெடுஞ்சாலைத் துறையின் நிதிஒதுக்கீட்டில் நடைபெற்று வரும் ”ரயில்வே மேம்பாலம் கட்டுமானப் பணிகளை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஒன்றிய செயலாளர் கே.வி.கே.ஆனந்த் ,நகரச் செயலாளர் ஆர்.ஆராஜசேகர்,ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் சோம செந்தமிழ் செல்வன் ,மகளிர் அணி தலைவர் ராணி சேகர் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.



கரூர் மாவட்ட சிஐஐ. ஒய்.ஐ. இந்தியன் உமன் நெட்வொர்க், கரூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள 85 வணிக சங்கங்கள் ஒன்றிணைந்து, 2030 ஆண்டுக்குள், கரூர் மாவட்டத்தின் அனைத்து தொழில்களின் வணிக இலக்கு ரூபாய் 50,000 கோடியை அடைந்திட, விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்திய மராத்தான் மற்றும் வாக்கத்தான் போட்டிகளை, கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி கரூரில் துவக்கி வைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல், எஸ். பி.ஜோஸ்தங்கையா, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர்கள் இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.